[1993 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசை எதிர்த்து போராட்டத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு நாம் உதவித் தொகை கொடுக்க ஆரம்பித்தால் அது தப்பான முன்னுதாரணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3 கவன ஈர்ப்பு.

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பேராவூரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பழுது பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து பேரவை விதி 55-இன் கீழ் கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பழுது பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பேராவூரணி கிளையில் இரண்டு புறநகரப் பேருந்துகளும் 14 நகரப் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. பேராவூரணி கிளையில் இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளும், பல்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளாகும். பெரும்பான்மையான சாலைகள் பழுதடைந்த கிராமப் புற சாலைகளாகவே இருப்பதால் பேருந்துகள் அடிக்கடி பழுதடைந்து வருகின்றன. இருந்தபோதிலும் தினசரி பராமரிப்பு, வாராந்திர பராமரிப்பு, மாதாந்திர பராமரிப்பு, ஆறுமாத பராமரிப்பு, தகுதி சான்றிதழ் பராமரிப்பு போன்ற பணிகள் தவறாமல் செய்து பேருந்துகள் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன

சோழன் போக்குவரத்துக் கழகத்தால் பேராவூரணி கிளையில் இயக்கப்படும் பேருந்துகள் ஆண்டு வாரியான விவரம் வருமாறு :—

ஆண்டு.		எண்ணிக்கை.
1986	..	7
1987	.	4
1988	..	1
1989		3
1990	..	1
மொத்தம்		16

இவற்றில் 4 பேருந்துகள் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தவிரவும் ஜுன் 1992 முதல் பிப்ரவரி 1993 வரையிலான காலத்தில் 7 பேருந்துகள் பெரிய பழுதுகள் சரி பார்க்கப்பட்டு இயக்கப்படுகின்றன. அவ்வாறு பழுது பார்க்கப்பட்ட நேரங்களிலும் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு மாற்றுப் பேருந்து உதவிகொண்டு பேருந்து வசதி தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. நிதிநிலைமையை பொறுத்தும் தேவைக்கேற்றவாறும் பழைய பேருந்துகளை கழிவடைந்த பேருந்துகள் மாற்றும் திட்டத்தின் கீழ் சோழன் போக்குவரத்துக் கழகம் மாற்றி வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை நான் படித்தேன். இந்த விவர அறிக்கையில் சாலைகள் யாவும் பழுதுபட்டு போய்விட்டதாகவும் அதனால் அங்கே பேருந்துகளை சரியாக இயக்க முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே தவறான செய்தியாகும். ஏனென்றால், நான் 6 மாதத்திற்கு முன்னதாக நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை சந்தித்து என்னுடைய பேராவூரணி தொகுதியில் என்ட் பகுதி, அதா

[திரு. ஆர். சிங்காரம்] [1993 மார்ச் 18

வது கடைமடைப் பகுதியாகும் என்றும் பெரும்பாலான சாலைகளெல்லாம் மோசமாகப் பழுதடைந்து போய்விட்டன; தார் சாலைகளிலெல்லாம் பஸ்கள் போக முடியவில்லை என்று நான் நேரடியாகப் பொதுப்பணி துறை அமைச்சர் அவர்கள் மூலமாகவும், நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, விசேஷமான ஏற்பாட்டில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு அந்தச் சாலைகள் யாவும் தார்ச்சாலைகளாகப் போடப்பட்டு இன்று தார்ச்சாலைகளாக, மிகப் பிரமாதமான முறையில் 26 சாலைகள் இன்று இருந்து கொண்டிருக்கின்றன. இன்னும் 6 சாலைகளில் தார் போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சியில் நல்ல சாலைகளாக ஆக்கப்பட்ட பிறகும் அதே சூழ்நிலையை சி.ஆர்.சி. துறையைச் சேர்ந்த எம். டி. அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எனக்கு உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது.

முற்பகல் 11-40

ஆனாலும் கூட மேலும் அந்தப் பேருந்துகள் யாவும்—16 பேருந்துகளுமே 20 வருஷங்களுக்கு முன்னதாக உள்ள பேருந்துகள்தான். ஆனால் 86 என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை அமைச்சரவர்கள் சரி பார்த்து—அந்தப் பேருந்துகள் யாவும் ஒழுகிக் கொண்டிருக்கின்றன. நான்கூட தமாஷாகச் சொன்னேன். அந்தப் பேருந்து எம்.டி. அவர்களிடத்தில் சொல்லி ஒவ்வொருவருக்கும் ஒரு குடை கொடுத்து விடுங்கள், அந்தக் குடைகளைப் பிடித்துக் கொண்டாவது அவர்கள் போகட்டும் என்று கூட நான் தமாஷாகச் சொன்னேன். அது போல இங்கே பேருந்துகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சாலைகள் மிக நன்றாக இருக்கின்றன. ஆகவே, இந்தப் பேருந்துகளையெல்லாம் மாற்றி, புதிய பேருந்துகளாக நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் விட வேண்டும். அதற்குத் துரித நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள்—அதிலே இயக்கப்படுகிற பேருந்துகள் 16. அதிலே புறநகர்ப் பேருந்துகள் 2; நகரப் பேருந்துகள் 14. அவர்கள் குறிப்பிடுவதைப் போல இந்தப் பேருந்துகளிலே 4 பேருந்துகள் அக்டோபர் முதல் டிசம்பர் மாதத்திலே புதிய பேருந்துகளாக மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற 7 பேருந்துகளை உட

னடியாகப் பழுதுபார்த்து அங்கே இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் ஏறத்தாழ 2500 பேருந்துகளை அந்தக் குறிப்பிட்ட காலத்திலே மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலையிருந்தாலும் கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அது மாற்றியமைக்காத காரணத்தால் இப்பொழுது நம்முடைய அரசு விரைந்து செயலாக்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, 1800-க்கும் மேற்பட்ட பேருந்துகளை இப்பொழுது புதிய பேருந்துகளாக நாம் மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் 15 சதவீத பேருந்துகளை நாங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று விரைந்து செயலாக்கினாலுமகூட டீசல் விலை உயர்ந்த காரணத்தினாலே அங்கே ஒவ்வொரு பேருந்துக் கழகத்திலும் இன்றைக்கு நஷ்டத்திலே இருக்கின்ற காரணத்தினால் அதை விரைந்து செயலாக்க வேண்டுமென்ற குறிப்பின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உலக வங்கியோடு பேசி, அன்றைக்குக்கூட கடனைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆக, இதுபோன்ற குறைபாடுகள் எதிர்காலத்திலே ஓரிரு மாத காலத்திற்குப் பிறகு எந்தத் தொகுதியிலும் இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. நான் குறை சொல்லவில்லை. அதேநேரத்தில், பேராவூரணியிலிருந்து சென்னைக்கு வரும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து பழுதுப்பட்டுப் போய்விட்டது. மிக மோசமான நிலையில் இருக்கிறது என்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் சொன்னேன். நம்முடைய முதலமைச்சரவர்களிடத்திலும் சொன்னேன். சொன்ன மறுநாளே இரண்டு பேருந்துகளும் புதிய பேருந்துகளாக விடப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்கும் மிக்க நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மக்கள் ஏறுகின்ற—மக்கள் வண்டி நகரப் பேருந்து—ஆகவே, அதில் அதிகமான டிக்கெட் ஏறுகிறது. மிக மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பேருந்துகளை உடனடியாக—அந்த நகரப் பேருந்துகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காகத்தான் நான் இந்த அளவிற்கு வலியுறுத்திச் சொல்கிறேன். ஆகவே, உங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் இதைச் செய்ய வேண்டும். அதுபோல தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பழைய பேருந்துகளையும் புதிய பேருந்துகளாகப் புதிய பொலிவோடு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அதையும் நீங்கள் புரட்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதை விரைவில் செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் ஏறுகிற பேருந்துகள் என்று குறிப்பிட்டார்கள். சில பேருந்துகளை-நாங்கள் நகரப் பேருந்துகளை இயக்குகிறபொழுது அந்தப் பேருந்துகளில் மக்களே ஏறாமல் பல நடைகள் அங்கே சென்று திரும்ப வருகிற காட்சியை நான் நாளை—என்னுடைய மானியக் கோரிக்கையின் பொழுது உங்களிடத்திலே விளக்கிச் சொல்லவிருக்கிறேன். அதுபோன்ற வழித்தடங்கள் எத்தனையோ இருக்கின்றன. குறிப்பிட்டுப் பார்க்கிறபொழுது ஆறு நடைகள் ஒரு நாளைக்கு ஒரு கிராமத்திற்குச் செல்கிறது என்று சொன்னால் அதில் 20 நாட்கள் தொடர்ந்து சென்றாலும் கூட ஒரு பயணிகூட அங்கே பயணம் செய்யவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஜூன் மாதத்திற்குப் பிறகு நீங்கள் குறிப்பிடுவதைப்போல பழைய பேருந்துகளே தமிழகத்தில் இருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே உத்தரவாதமாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. வரவு-செலவுத் திட்டம், 1993—94 பொது விவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993—94 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். இன்றைய தினம் எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேண்டியிருக்கிறது. அதை மனத்திலே வைத்துச் சுருக்கமாகப் பேசி முடித்தால் நன்றாக இருக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுவதற்கு முன்பாக நம்முடைய தலைவர் அவர்களுடைய தலைக்கு மேலே ஒரு பரதேசி அமர்ந்திருக்கின்றார் ; அந்தப் பரதேசிதான் நமக்கெல்லாம் விடுதலை வாங்கிக் கொடுத்து, நம்முடைய அருமை முதல்வரவர்களை இங்கே முதல்வராகின்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தவரே அந்தப் பரதேசிதான். (குறுக்கீடு) சுதந்திரம், நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தன்னைத் தானே பரதேசி என்று சொல்லிக்கொண்டவர். மற்றவர்கள் அவரைப் பார்த்துப் பரதேசி என்று சொல்வது நன்றாக இருக்காது நாம் அவரோடு ஐக்கியம் ஆனவர்கள். அவர் தன்னைத்தானே சொல்லிக்கொண்டது வேறு; நாம் சொல்வது வேறு.

திரு. குமரி அனந்தன்

TRUTH ALONE TRIUMPHS